www.tamilrangam.net

# விஞ்ஞானிகள் அறிவுஜீவிகளுக்கு

தமிழர் சமூக அறிவியல் ஆராய்ச்சி நிலையம்

சென்னை. தமிழ்நாடு.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வெளியீடு: 1

★

தமிழர் சமூக அறிவியல் ஆராய்ச்சி நிலையம்,
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்,
இல. 11, தேசிகர் வீதி,
சென்னை-600 026,
தமிழ்நாடு, இந்தியா.

20-10-1984.

★

TAMILS SOCIAL SCIENCE RESEARCH CENTRE,
PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM
No. 11, DESIGAR STREET,
MADRAS-600 026,
TAMIL NADU, INDIA.

அறிஞரெல்லாம் ஒரணியில் திரள்வோம்,
அவனியிலே தமிழீழம் உயர்ந்ததெனச் செய்வோம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

பேரன்புடையீர்,

வணக்கம்!

அனைத்துலகிலுமுள்ள விஞ்ஞானிகள், அறிவியலாளர்கள் அனைவருக்குமாகவே இவ்வேண்டுகோளை விடுக்கின்றோம்.

எதிர்காலத் தமிழீழத்தில் தமிழ்பேசும் மக்கள் முழுநிறைவானதோர் அனைத்தம்ச வளர்ச்சியை அடைவதற்காக தமிழீழமக்கள் விடுதலைக் கழகத் தவர்களாகிய நாம் வகுத்துள்ள ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் (Programme) ஆரம்பமே இது.

மார்க்ஸிய — லெனினிய சித்தாந்தத்தை ஏற்று தமிழீழ மக்களுக்கு விடுதலையை ஈட்டித்தர சங்கற்பம் பூண்டுள்ள நாம் அறிவியலாளர்களையும் விஞ்ஞானிகளையும் தவிர்த்துவிட்டு இந்தப் பணியை மேற்கொள்ள முடியாது.

பொதுவான நடைமுறையில் சமுதாயத்தில் உயர் அந்தஸ்துகளிலுள்ள இவர்களில் பெரும்பாலானவர்கள் "குட்டி பூர்ஷ்வாக்கள்" என்றே வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களிற் சிலர் இப்போது அரச இயந்திரத்திற்கு உதவி புரிபவர்களாகவும், பலர் வெளிநாடுகளில் வாழ்பவர்களாகவுமே இருக்கின்றனர்.

இன்றைய நிலையில் தமிழீழத்தின் மகத்தான உற்பத்திச் சக்திகளில் மூளைத் திறன் (Brain Power) என்பது புறக்கணிக்கப்படக் கூடியதல்ல, எனவே. இந் நிலையில் எமது புத்திஜீவிகளும் தமிழீழப் போராட்டத்தில் ஈடுபடவேண்டியது இன்றியமையாததாகின்றது.

நாம் பிசகற்ற சோஷலிஸத் திசைவழியை மேற்கொண்டவர்கள். எமது விடுதலைப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியில் நாம் இப்போது இரண்டாவது கட்டத்திலேயே இருக்கின்றோம். இக் காலகட்டத்தில் தமிழீழ தேசிய விடுதலை மற்றும் புரட்சிப் போராட்டத்தைப் பிசகற்ற பாதையில் வழிநடத்துவதற்கான ஆலோசனைகளையும் கருத்தியல் தெளிவையும் வழங்கவேண்டிய கடமை எமக்கிருக்கின்றது. அதற்கு எமது புத்திஜீவிகளின் பங்கும் அத்தியாவசியமானது என்பதை உணர்ந்தே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



ஒரு ஆராய்ச்சிப் பிரிவை ''தமிழர் சமூக அறிவியல் ஆராய்ச்சி நிலையம்'' என்ற பெயரில் தோற்றுவித்துள்ளது. அதன் முதற்கட்டப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

தங்களின் ஒத்துழைப்பும், அறிவு வீச்சுமே தமிழீழத்திற்கான உந்து சக்தியாகத் திகழும் என நாம் கருதுவதால், எமது இலட்சியமான தமிழீழத்தை நேர்த்தியானதும் தன்னிறைவு மிக்கதுமான ஒரு நாடாக உருவாக்கும் பொருட்டு அறிவு ஜீவிகளான தாங்களனைவரும் எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம். தங்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் நாம் முழு மனதோடு வரவேற்கின்றோம்.

எமது ஆராய்ச்சி நிலையத்தின் இன்றைய பிரதான நோக்கம் தமிழீழத்தை உருவாக்குவதற்கான புதிய கல்வி, அரசியல் அறிவு, சமூகவியல் ஆய்வு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான தொழில்கள், விவசாயம், மீன்பிடித்தல் போன்றவற்றிற்கான மூலத் திட்டங்களை உருவாக்குவதும், கலை, இலக்கிய, பண்பாட்டு, ஆன்ம விழுமியங்களுக்கான அடிப்படைகளை ஏற்படுத்துவதுமேயாகும்.

இவற்றிற்கெல்லாம் உதவுவதற்காக ஒரு நூலகமும் எமது ஆராய்ச்சிப் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு மாதமேயான முழுமை பெறாத இந்த நூலகத்திற்கு அனைத்து அறிவுத் துறைகளையும் சார்ந்த நூல்களையும், சுவடிகளையும் திரட்டுவது ஒரு பெரும் கடமையாகும். ஆராய்ச்சியாளர்களுக்கும் எமது நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் உதவும் பொருட்டு இந்த அறிவியற் செல்வங்களை உடனடியாகச் சேர்ப்பது பாரிய பொறுப்பாயிருக்கின்றது.

ஆராய்ச்சி நிலையத்துக்கு அறிவுஜீவிகளின் பங்களிப்பைப் பெறுவதை மூன்று பகுதிகளாக வகுத்துள்ளோம் ;

1: கழகத்தின் உறுப்பினர்களாக இயங்குபவர்கள்.

2: கழகத்திற்கு ஆதரவாளர்களும் தமிழீழ விடுதலைக்கு ஆதரவாளர்களும்.

3: வெளிநாட்டவர்கள் :

(i) பல்கலைக்கழகத்தினர், பேராசிரியர்கள், கல்விமான்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள்.

(ii) பத்திரிகையாளர்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



(iii) ஆராய்ச்சியாளர்கள்; (iv) ஆதரவாளர்களும் அனுதாபிகளும்.

அறிஞர்கள் தமிழீழத்தை தன்னிறைவு மிக்க ஒரு பலமான நாடாக உருவாக்கத் தொழிற் திட்டங்களையும் (Projects), செய்திட்டங்களையும் (Schemes), வேலைத் திட்டங்களையும் (Plans) சமர்ப்பிக்கலாம்.

தொழிற்துறை, விவசாய வள ஆய்வுகளுக்கான நூல்களையும், வெவ்வேறு நாடுகளின் அனுபமுறைகளையும் அனுப்பி உதவலாம்.

நவீன விஞ்ஞானத்தின் அனைத்துக் கண்டுபிடிப்புகளையும் தந்துதவலாம்.

அறிஞர்கள் தங்களின் அறிவுத் தேட்டங்களைத் தனிப்பட்ட ரீதியில் இஷ்டபூர்வமாகத் தந்துதவும் அதே வேளையில் பின்வரும் விதத்திலும் எம்முடன் ஒத்துழைக்கமுடியும்:

(i) தாங்கள் வாழும் நாட்டில் எமது பிரச்னைகள் சம்பந்தமாக ஆராய்ச்சிப் படிப்பையோ, வரலாறு, அபிவிருத்தி தமிழ்மொழி சம்பந்தமான பாடத்திட்டங்களையோ மேற்கொண்டுள்ள பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றுடன் எமக்குத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

(ii) சமூகவியல் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஆராய்ச்சி நிலையங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து அனுப்புதல்;

(ii) தாங்கள் வாழும் நாட்டைப் பற்றிய சமூக, பொருளாதார, அரசியல், கலை, கலாசார தகவல்களையும், விபரங்களையும் அனுப்புதல். அரசியல் கட்சிகள், அந் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை, அங்குள்ள தமிழீழ மக்களின் எண்ணிக்கை, நிலைமைகள் என்பன இவற்றுள் அடங்கும்.

(iv) பல்வேறு நாடுகளின் அரசியல் யாப்புகளை அனுப்புதல்;

(v) எமது ஆராய்ச்சி நிலையத்தின் நூலகத்தை மேலும் விரிவாக்கவேண்டியுள்ளது: அதற்கான நூல்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், நாளிதழ்கள் என்பவற்றை அனுப்பி உதவுதல்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



கடந்த ஒரு மாத காலமாக இவ் ஆராய்ச்சி நிலையத்தை நடத்தும் அனுபவத்திலிருந்து மேலே குறிப்பிட்டவையும் இன்னும் பல ஒத்துழைப்புகளும் எமக்குத் தேவையாயிருக்கின்றது. ஆக, எமது செயலூக்கம் மட்டுமல்ல தங்களின் பங்களிப்பையும் பொறுத்தே எமது ஆராய்ச்சி நிலையம் தனது பணியை முழுமையாக நிறைவேற்ற முடியும்.

தமிழீழப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து தோழர்களுக்கும் இவ்வித அறிவுத் திரட்சி அத்தியாவசியமாகின்றது.

அத்துடன், நாம் உருவாக்கப்போகும் தமிழீழத்திற்கு இயற்கை அறிவியலும், தொழில் நுட்பமும் இன்றியமையாததென்பதையும் தாங்களறிவீர்கள். அதற்காக எதிர்காலத்தில் "தமிழீழ அறிவியல், தொழில் நுட்ப பேரவை" ஒன்றையும் உருவாக்கும் திட்டம் இருக்கிறது. பெரிய அளவிலான அந்த "Academy of Sciences and Technology of Thamil Eelam" என்ற நிறுவனம் தங்களைப் போன்ற அறிவாளிகளின் ஆலோசனையுடனும், ஒத்துழைப்புடனுமே நிறுவப்படும். அது தமிழீழத்தின் பொருளாதார மற்றும் தொழில் வளத்தைப் பெருக்கும் ஒரு களஞ்சியமாகத் திகழும்.

நாம் ஈடுபட்டிருப்பது தமிழ் இனத்திற்கு உலகத்திலேயே முதன்முதலாக ஒரு சுதந்திரமான, இறைமையுள்ள நாட்டை உருவாக்கிக் கொடுக்கும் போராட்டம் என்பது உலகறிந்ததே.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாம் விடுதலையடையப் போகின்ற தமிழீழத்திற்கு அறிவுத் தேட்டமே அச்சாணியாயிருக்குமென்பதையும் உணர்ந்தே இந்த அறிவுப் போராட்டத்திலும் எம்மைப் பிணைத்துக் கொண்டுள்ளோம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எமது இலட்சியப் பணிகள் முழுமை பெற அனைவரின் ஆதரவும் முழுமையான ஒத்துழைப்பும் தேவை என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

எனவே இவையனைத்திற்கும் தங்களைப் போன்ற அறிஞர்களின் ஆதரவும் உதவிகளும் கிடைக்குமென நம்புகின்றோம்.

தங்களின் பதிலை எதிர்பார்க்கின்றோம். நன்றி!

இப்படிக்கு,

**எஸ். எம். கஜன்**
*நிர்வாகப் பொறுப்பாளர்*

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமானது தொழிலாளர் வர்க்க கருத்தியலுடன் தமிழீழ மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவும், வழி நடத்தவும் தவிர்க்கமுடியாத வரலாற்று, அரசியல் தேவைகளையொட்டி உருவான ஒரு மார்க்ஸிய-லெனினிய புரட்சிகர இயக்கமாகும். த.ம.வி. கழகத்தை உருவாக்கியதற்கான ஒரு அதிமுக்கிய நோக்கம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு வர்க்கத் தன்மையைக் கொடுப்பதற்கேயாகும். ஏகாதிபத்திய விரோத, ஸயோனிஸ விரோத இயக்கமான த. ம. வி. கழகம் எல்லா வடிவத்திலுமான பாகுபாடு, அடக்குமுறை, நவகாலனித்துவம், சுரண்டல், மனித உரிமைகள் மீறல் என்பனவற்றை எதிர்த்துப் போராடுகின்றது. அனைத்துத் தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் தனது முழுமையான ஆதரவை வழங்கி வரும் த. ம. வி. கழகம் எப்போதும் சோஷலிஸ நாடுகளுடனும், முழு உலகிலுமுள்ள தொழிலாளர்கள் மற்றும் முற்போக்கு ஜனநாயக சக்திகளுடனும் ஒருமைப்பாட்டைப் பேணுகின்றது. சோஷலிஸத் திசைவழியிலான பாதையையே மேற்கொண்டுவரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் இறுதி இலட்சியம் உலக அமைதியே.

www.tamilrangam.net



Dear Comrades,

We submit this appeal to the scientists and intellectuals of the entire world.

The People's Liberation Organization of Thamileelam (PLOT) strives and works for a free Thamileelam, which could follow an independent path for an all comprehensive progress. This programme is drafted with this aim as its first beginning step.

As Marxist-Leninists sworn to win liberation for the people of Thamileelam, we believe that this noble task is impossible without the support and cooperation of the scientists and intellectuals.

Most of them hold high positions in the society and some continue to be "Petty bourgeoisie". Today some of them render their services to the government machinery and some others have gone to foreign countries expecting better prospects. It is a fact that, a great productivity of Thamileelam today is BRAIN POWER, which cannot be rejected. Hence it is important and unavoidable for the scientists and intellectuals to take part in the Thamileelam struggle.

We have chosen the correct path of socialism. Ours is a working-class ideology. We are in the second stage of our struggle. Therefore it is our duty to advice and give a clear ideological stand to lead the national liberation and revolutionary struggle on proper lines. Having considered to channelise the services of the scientists and intellectuals to fulfil this task, the PLOT has formed the **"Tamils Social Science Research Centre"**.

We believe that your intellectual dynamism and cooperation will be an impetus to Thamileelam, and earnestly request your goodself to contact and keep in touch with us to make Thamileelam a genuine and self sufficient nation. We expect your ideas and suggestions in this regard.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



The immediate tasks of our centre are to formulate (a) preliminary plans for the education of the new world, political knowledge and sociological analysis to make our people's thinking progressive and fruitful; (b) schemes for agriculture, farming and fishery to help the economic development; and (c) the basics for our moral, aesthetic, cultural and spiritual values.

To help achieve these tasks, we have opened a library, which is incomplete. It is our responsibility to collect, as early as possible, the reference books, manuscripts etc. to this library which are a must for the researchers and for our work.

Obtaining the contributions of the intelligentsia are categorised as follows :

1. Members of the PLOT.
2. Sympathysers to the PLOT and supporters of Thamileelam cause .
3. People abroad:

   (i) Researchers (ii) Academicians—Professors, Scholars, Lecturers and Students (iii) Journalists.

Scientists and intellectuals can submit their Projects, Schemes and Plans which will help to create Thamileelam a souvereign and self sufficient state; send books and approaches of various countries on industries, agriculture, farming etc; provide us the latest inventions of modern science and technology.

They can help us individually and voluntarily. At the same time they can cooperate with us by :

(i) making arrangements to link with us the Universities, Colleges and Academies of the country they live in, particularly the departments conducting research on our country, language, society, history problems etc;

(ii) furnishing us with particulars about the institutions of social science, research and so on;

(iii) sending details and informations on social, political, economic and aesthetic problems and about the political parties of the country they live in;

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



(iv) sending the constitutions of various countries; and

(v) sending important books, pamphlets, journals and papers to expand our library.

The library has been commenced only a month ago and hence apart from the above help, we need ample support and assistance from well wishers world over to make it a complete library. Undoubtedly it is with the help of you only, the centre can provide its services to our people and our cause

We believe that full-fledged knowledge is needed to all who are committed to the Thamileelam struggle.

You would accept that knowledge in natural science and modern technology are essential to the upliftment of Thamil eelam. Hence our future plan is to open an "Academy of Sciences and Technology of Thamileelam" with the advice and assistance of you all (ie-scientists & intellectuals). This academy will be a "Resource Centre", which will help to increase the potentials to develop the industries and economy.

It is well known that, we are engaged in a struggle to create in the globe the first, independent and souvereign state of the Tamils.

Though engaged in an armed struggle, we realise that latest achievements of modern science and technology will be the foundation to Thamileelam, and hence this "struggle for knowledge".

We believe that you will extend your full support and cooperation, for us to achieve the common goal and also to render our contribution to the world process & progressive mankind.

We remain in solidarity.
Yours Sincerely,

**S. M. KAJAN**
(Officer-in-Charge)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# PEOPLES' LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

Peoples' Liberation Organization of Thamileelam (PLOT) is a Marxist - Leninist revolutionary movement emerged due to the unavoidable historical and political needs of Thamileelam to represent and lead our people with a working class ideology. An important motive for establishing the PLOT is to give a class perspective in the Thamileelam national libertaion struggle. PLOT is anti-imperialist, anti-zionist and against all forms of discrimination, oppression, neo-colonialism, exploitation and violations of human rights. PLOT extends its fullest support to all the national liberation movements and always in solidarity with the socialist countries and with the workers and progressive and democratic forces of the entire world. PLOT's path is socialist oriented and it's ultimate aim is world peace.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# A REQUEST TO THE INTELLIGENTSIA

TAMILS SOCIAL SCIENCE RESEARCH CENTRE

MADRAS. TAMIL NADU

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்